இந்தியமருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் அவர்களின்
செயல்முறைஆணை, சென்னை-106.
முன்னிலை: திருமதி.மைதிலி க இராஜேந்திரன்., இ.ஆ.ப.,

ந.க.எண்:14050/நி2/3/2022 நாள்:09.11.2023

பொருள்: நிர்வாகம்-இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை-தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள் - பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, தமிழ்நாடு அரசு தேர்வாணைய செயலாளரின் கடித ந.க.எண்:2383/PSD-12/2020, நாள்:21.07.2020.
2. மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநரக ந.க.எண்:4785/ நி2/2020-1, நாள்:28.08.2020
4. சென்னை, அரசு கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வரின் ந.க.எண்:6523/நி1/1/2020, நாள்:13.08.2020.
5. மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநரக ந.க.எண்:31495/ நி2/2/2020 நாள்:05.08.2020

**ஆணை:-**

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 2 முதல் 4 வரை காணும் பணிநியமன ஆணை மூலம் இளநிலை உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்கண்ட இளநிலை உதவியாளர்களின் தற்காலிக பணிகள் **தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனை) விதிகள் 28-ன்படி,** அவர்கள் பணியில் இணைந்த நாள் முதல், பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்,பதவி (மற்றும்) தற்போது பணிபுரியும் இடம் | அரசுபணியில் இணைந்தநாள் | பணிவரண்முறை செய்யப்பட்டநாள் |
|---|---|---|---|
| 1 | திரு.பூ.சத்தியமூர்த்தி<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அலுவலகம்,<br>விழுப்புரம் மாவட்டம். | 02.09.2020 மு.ப | 02.09.2020 மு.ப |
| 2 | திரு.இர.லோகநாதன்<br>இளநிலை உதவியாளர்<br>சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம்,<br>செங்கல்பட்டு. | 17.08.2020 மு.ப | 17.08.2020 மு.ப |
| 3. | திரு.வெ.விஜயகுமார்<br>இளநிலை உதவியாளர்<br>சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம்,<br>செங்கல்பட்டு. | 19.09.2020 மு.ப | 19.09.2020 மு.ப |

பார்வை 1-ல் காணும், சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-IV தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளரின் பணியானது தற்காலிகமானது என்றும் ,சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள இத்தேர்வு தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உடன்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் இளநிலை உதவியாளர்கள் பணியில் இணைந்த நாள் முதல் அவர்களது தற்காலிகப் பணிகள், பணிவரன் முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவகாலத்தில் அமர்த்தப்படுகிறார்கள். மேலும் நடைமுறையில் உள்ள பணி விதிகளின் படி தகுதிகாண் பருவமான இரண்டு வருட காலத்தைத் தொடர்ந்து மூன்று வருட பணிக்காலத்திற்குள் முடித்திடவும் மேலும், அக்கால அளவிற்குள் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப் பெறும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மைதிலி க இராஜேந்திரன்
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி ஆணையர்

பெறுநர்
சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் - உரிய வழிமுறையாக

நகல்:-

1. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் விழுப்புரம் மாவட்டம்
2. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் காஞ்சிபுரம்
3. தனி அலுவலர் (பொ), சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம், செங்கல்பட்டு

மேற்கண்ட இளநிலை உதவியாளர்களின் பணிப்பதிவேடுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இவர்களின் பணிவரன்முறை விவரத்தை தனியர்களின் பணிப்பதிவேடுகளில் பதியுமாறும், பணிப்பதிவேடுகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை உடனடியாக இவ்வியக்ககத்திற்கு அனுப்புமாறு சம்மந்தப்பட்ட சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர், சென்னை-6.
4. பணிப்பதிவேடு
5. இருப்புகோப்பு

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

10/11/2023

துணை இயக்குநர் (நிர்வாகம்) (பொ)

10/11/23

10/11/23